1994 மே 5] [திரு. எஸ். கண்ணப்பன்]

பிற்பகல் 12-55

ஆகவே, கண்ணீர் விடுகின்ற அளவுக்கு எந்த விவசாயியையும் இந்த அரசு கொண்டு போகாது என்ற உறுதியை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயியின்பால் மிகுந்த அக்கறை கொண்டுள்ள காரணத்தினாலே தான் நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற தாய் உள்ளத்தோடு இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குக் கூட பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலேகூட 4 மண்டல பாசனம் எல்லாம் வந்திருக்கிறது. கோரிக்கைகளை எல்லாம் ஏற்று, விவசாயிகளுக்கும் 900 கோடி ரூபாயிலே இலவச மின்சாரம் தருகிறோம். ஆகவே, விவசாயிகள் கண்ணீர் விடுகின்ற பிரச்சினையே இந்த ஆட்சிக் காலத்திலே இல்லை என்பதையும், வேண்டுமானால் அந்தக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக இருக்கும் என்பதை மாத்திரம் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, உயிர்த்தண்ணீர் விடுகின்ற பிரச்சினை என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக அதிகாரிகளிடத்திலே அறிக்கை கேட்டிருக்கிறேன். இன்றோ அல்லது நாளையோ முடிவு எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

(உ) மதுரை நகரில் இரவு 10 மணிக்கு மேல் சிறு கடைகளைத் திறந்து வைக்கக் கூடாதென வற்புறுத்தப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆண்டித் தேவர் அவர்கள், கொஞ்சம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். மதுரை நகரில் இரவு 10 மணிக்கு மேல் சிறு கடைகளைத் திறந்து வைக்க அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள் என்ற ஒரு பிரச்சினையை நீங்கள் பேரவை விதி 55-ன்கீழ் கொடுத்திருந்தீர்கள். அதே பொருள் பற்றி திரு. தெய்வநாயகம், திரு. அமர்நாத் அவர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். நான் இன்றைக்கு ஏற்கெனவே 79 பிரச்சினைகளுக்கு இங்கே பதில் வைத்து இருக்கிறேன். உங்களுடைய பதில் இன்னும் வரவில்லை. வந்தவுடன் உங்களுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை என்றுதான் நான் சொன்னேன். 10 தினங்கள் ஆகிவிட்டன. போலீஸ் இந்த அவைக்கே தகவல் கொடுக்கின்ற ஒரு முக்கியமான இலாக்கா. அவர்களே தகவல் தரவில்லை என்று தகவலைச் சொல்கின்றீர்கள். மதுரை மாநகரம் என்

றால் மீனாட்சிப் பட்டணம் என்று பெயர். மீனாட்சி என்பது மீன் தூங்காது, அதுபோன்று தமிழகத்திலே தூங்காத நகரம் மதுரை. ஏன் என்று சொன்னால் இரவு முழுவதும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பிரச்சினைக்கு பதில் வந்த உடன் அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி விட்டேன். நான் இங்கே என்ன பிரச்சினை என்பதையும், சொல்லிவிட்டேன் அல்லவா ? நீங்கள் பேசுவதற்கு இப்பொழுது பதில் தர முடியாது அல்லவா ? இன்னும் அலுவல்கள் நிறைய இருக்கின்றன.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பதில் தர முடியவில்லையென்று சொன்னாலும், பிரச்சினை என்ன என்று சொன்னால், இரவு 10 மணிக்கு மேல் கடைகளை எல்லாம் மூடச் சொன்னால் மற்ற நகரங்களில் நடப்பது போன்று முகமூடிக் கொள்ளை மற்ற கொள்ளைகள் நடந்துவிடும். மதுரையிலே இதுவரை அந்த மாதிரி சம்பவங்கள் இதுபோன்று இரவு முழுவதும் கடைகள் இருப்பதனால்தான் இதுவரை நடக்கவில்லை. அப்படி சம்பவங்கள் நடப்பதற்காகத் துணைபுரிகின்ற அளவுக்கு போலீஸ் அதிகாரிகள் 10 மணிக்கு மேல் கடைகள் இருக்கக்கூடாது என்ற அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வந்த உடன் உங்களுக்குத் தருகிறேன்.

(ஊ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக மானியம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட்டம் பற்றிய பிரச்சனை, திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் வெள்ளத்தினால் ஏராளமான வீடுகள் பாதிக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிசைகள் பாதிக்கப்பட்டன. இதே பிரச்சினையைக் குறித்து பேரவை விதி 55-ன்கீழ் திரு. அப்பு நடேசன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.